தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

**திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

(17.12.2022 முதல் 21.12.2022)

**அறிக்கை எண்: 100/2022** **தேதி: 16.12.2022**

**திருவாரூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 26 - 30 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 24 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**திருவாரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (17.12.2022 முதல் 21.12.2022).**

| கடந்த வார வானிலை (13.12.2022 முதல் 15.12.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (17.12.2022 முதல் 21.12.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 13/12 | நாள்-2 14/12 | நாள்-3 15/12 | தேதி | நாள்-1 17/12 | நாள்-2 18/12 | நாள்-3 19/12 | நாள்-4 20/12 | நாள்-5 21/12 |
| 3.7 | 28.4 | 0.0 | மழை (மி.மீ.) | 2 | 4 | 4 | 16 | 22 |
| 28 | 26 | 30 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 31 | 30 | 30 | 28 | 26 |
| 24 | 23 | 24 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 24 | 24 | 24 | 24 | 23 |
| 7 | 6 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 2 | 8 | 7 | 7 | 8 |
| 83-83 | 85-71 | 83-76 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-70 | 90-70 | 90-70 | 90-80 | 90-80 |
| 4 | 4 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 8 | 10 | 10 | 8 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

**திருவாரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் அதிக மேகமூட்டத்துடன் காணப்படும். 17.12.2022 முதல் 21.12.2022 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 26 - 31 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 24 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-10 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

:

| | | |
|---|---|---|
| பொது | | மழையை கருத்தில் கொண்டு, நீா் பாசனத்தை தள்ளிபோடவும் / தவிா்க்கவும் |
| | | மழையை கருத்தில் கொண்டு,தண்ணீா் தேங்கும் வயல்களுக்கு தகுந்த வடிகால் செய்யவும். |
| நெல் | நடவு வயல் | இலை சுருட்டுப்புழுக்களின் அறிகுறிகள் (புழுக்களால் சுருண்ட இலைகள், வெள்ளையான சுரண்டப்பட்ட இலைகள்) குறிப்பிட்ட அளவில் தென்பட்டால், காா்போசல்பான் 6 % குருனையை எக்டருக்கு 16.7 கிலோ தூவவும் அல்லது காா்டாப் கைட்ரோ குளோரைடு 50 % SP யை எக்டருக்கு 1 கிலோ என்ற அளவில் மழை நின்ற பின், வயலில் தூவவும். விவசாயிகள் பிவேரியா பேசியானா வை தமிழ் நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறையில் வாங்கி பயன்படுத்தலாம். |
| | | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் ஆனைக்கொம்பன் ஈ தாக்கம் பரவலாக தென்படுகிறது. இதனால் பயிரின் குருத்துப் பகுதி வெங்காயத் தாள் போல் மாறி கதிா்கள் வெளிவராது. இதன் பரவலை தடுக்க, மழை நின்ற பின், குளோா்பைரிபாஸ் 20 EC 500 மில்லி / எக்டா் என்ற அளவில் பயன்படுத்தவும் அல்லது பிவேரியா பேசியானா 5 கிராம் என்ற அளவில் 1 லிட்டா் தண்ணீாில் பயன்படுத்தவும். |
| | | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலையுறை கருகல் நோய் பரவலாக தென்படுகிறது.இதன் பரவலை தடுக்க, மழை நின்ற பின், ஏக்கருக்கு காா்பன்டெசிம் 200 கிராம் அல்லது புரோப்பிகோனோசோல் 200 மி.லி மருந்தை 200லிட்டா் தண்ணீாில் கலந்து தெளிக்கவும் |
| கால்நடைகள் | ஆடு மற்றும் மாடு | தற்போது இரவு நேர வெப்பநிலை குறைந்து காணப்படுவதால் நிமோனியா பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது எனவே ஆடு, மாடு குறிப்பாக இளம் கன்றுகளை திறந்த வெளியில் விடக்கூடாது. இரவு நேரங்களில் கொட்டகைகளில் வெப்பமூட்டிகளை பயன்படுத்தவும். |

**குறுஞ்செய்தி**

மழையை கருத்தில் கொண்டு, நீா் பாசனத்தை தவிா்க்கவும் / தள்ளிபோடவும். தண்ணீா் தேங்கும் வயல்களுக்கு தகுந்த வடிகால் செய்யவும்.

**இயக்குநா்**